## ⇒ தொன்மைத் தமிழகம்

தமிழ்நாடு தொன்மையும் சிறப்பு வாய்ந்தது. முதல் மாந்தன் தோன்றிய இலெமூரியா மனித நாகரிகத் தொட்டில் எனப்பட்டது.பண்டைத் தமிழகம் குமரிமுனைக்கு தெற்கே விரிந்து குமரிமலை, பஃறுளி ஆறு முதலியவற்றை உள்ளடக்கி இருந்தது.

பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள

**– சிலப்பதிகாரம்**

திங்களோடும் செழும்பரிதி தன்னோடும்
விண்ணோடும் உடுக்களோடும்
மங்குல்கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன்
பிறந்தோம் நாங்கள் **– பாரதிதாசன்**

வரலாற்று ஆசிரியர் பலரும் கிறித்துவ ஊழித் தொடக்கத்திற்கு முன்பே மதுரையில் தமிழ் சங்கம் இருந்திருக்க வேண்டும் என்று கூறுகின்றனர்.இத்தகைய மரபுச் செய்தி வேறு எங்கும் இல்லை என்பது **தனிநாயகம் அடிகளின் கூற்றாகும்.**

- தமிழ் சங்கம் இருந்தது என்பதனை **தமிழ்கெழுகூடல்** என்று புறநானூறும்,
- **தமிழ் வேலி** என்று பரிபாடலும்,
- **கூடலில் ஆய்ந்த ஒண்தீந் தமிழின்** என்று மணிவாசகமும் குறிப்பிடுகின்றன.
- பண்டைத் தமிழகத்தில் நடைபெற்ற ஏற்றுமதி, இறக்குமதி குறித்து பட்டினப்பாலையும், மதுரைக்காஞ்சியும் கூறுகின்றன.

**நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
மயங்கிய நனந்தலை மறுகு**

**– பட்டினப்பாலை**

- தொல்காப்பியமும், சங்க இலக்கியமும், சிலப்பதிகாரமும் இசை மரபுகளை வெளிப்படுத்துகின்றன.
- **நரம்பின் மறை** என்று தொல்காப்பியர் உரைப்பதன் மூலம் இசை இலக்கண நூல்கள் இருந்ததை அறிந்து கொள்ள முடிகிறது.
- தமிழர் வாழ்வில் பிறப்பிலிருந்து இறப்பு வரைக்கும் இசையே முதன்மை பெறுகிறது.
- பாணன், பாடினி, கூத்தன், விறலி என்று இயலிசை நாடக கலைஞர் இருந்தமையை அறிய முடிகிறது.
- இன்றைய கர்நாடக இசைக்குத்தாய் தமிழிசையை **பண்ணொடு தமிழொப்பாய்** என்னும் தேவாரம் பண்ணும் தமிழும் பிரிக்க முடியாதது என்று கூறுகிறது.
- பிறந்தவுடன் பாடப்படுவது தாலாட்டு இறந்த பின்பு பாடுபடுவது ஒப்பாரி. ஒப்பாரி என்பது இவருக்கு ஒப்பார் ஒருவருமிலர் என்ற பொருளுடன் பாடப்படுவது.
- **ஒக்கூர் மாசாத்தியார்** என்ற பெண்பாற்புலவர் பெண்களின் பெரு வீரத்தினை பற்றி பாடியுள்ளார்.
- **‘களிறு எறிந்து பெயர்தல் காளைக்கு கடனே’** என்ற புறப்பாடல் வீரத்தினை முதன்மையாக்குகிறது.
- உழவிற்கு சிறப்பு பெற்ற மருத நிலத்தின் பெருமை கருதியே வேந்தனை முதன்மைப்படுத்தினார் தமிழர்.

## ⇒ தொன்மைத் தமிழகம்

**சொல்லின் செல்வர் ரா. பி .சே. யின் கூற்று**



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- ஏரினால் விளையும் உணவுப் பொருள்களை எல்லாம் ஒரு சொல்லால் உணர்த்தினார் தமிழ் நாட்டார்.
- நெல்லும் புல்லும், வரகும் திணையும், எள்ளும் கொள்ளும், அவரையும் துவரையும், பயறும் உளுந்தும், சாமையும் பிறவும் கூலம் என்ற ஒரு சொல்லாலேயே குறிக்கப்பட்டன.
- முற்காலத்தில் கூலக்கடை என்பது பலவகை தானியங்கள் விற்கும் கடைக்கு பெயராக அமைந்திருந்தது. மதுரை மாநகரில் கூலக்கடை வைத்திருந்த சாத்தனார் கூலவணிகன் சாத்தனார் என்று பெயர் பெற்றார். அவரே மணிமேகலை என்ற காப்பியத்தை இயற்றினார்.
- சோழ நாட்டின் தலைநகரான காவிரி பூம்பட்டினத்திலும், பாண்டி நாட்டின் தலைநகரான மதுரையிலும் **'கூலங்குவித்த கூல வீதிகள்'** இருந்தன, என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.
- இசை அரங்குகளிலும், நடன சாலைகளிலும் நாடாளும் மன்னனை வாழ்த்திய பின்பு, உணவளிக்கும் உழவனை இசைவாணர்கள் வாழ்த்துவர். 'பதினெண் கோலமும் உழவர்க்கு மிகவே' எனும் வாழ்த்துரை ஒரு பழைய இசை நூலில் காணப்படுகிறது.

⇒ **பழந்தமிழர் சமூக வாழ்க்கை**

| பண்டைய தமிழர் வாழ்ந்த முறைகள் | பண்புகள் |
|---|---|
| அறன் எனப்பட்டதே இவ்வாழ்க்கை | இல்லறம் |
| உண்பது நாழி உடுப்பவை இரண்டே | எளிய வாழ்க்கை |
| செல்விருந்து ஓம்பி வருவிருந்து எதிர்பார்த்தல் | உயர் பண்பு |
| கொள்வதும் மிகை கொளது கொடுப்பதுவும் குறைபடாது வாழ்தல் | கொள்கை சிறப்பு |
| களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே | வீரம் |
| அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு | தூய அன்பு |
| யாதும் ஊரே, யாவரும் கேளிர் | உலகப் பொதுமை |

⇒ **விழாக்கள்**

- தைத்திங்கள் நோன்பு
- தை நீராடல்
- கார்த்திகை திருநாள்
- திருவாதிரை விழா
- பங்குனி உத்திர விழா
- இந்திர விழா
- வேலன் வெறியாட்டு விழா
- இளவேனில் விழா
- போன்ற விழாக்களை கொண்டாடியதை அகநானூறு, கழித்தொகை, பரிபாடல் முதலிய இலக்கியங்கள் கூறுகின்றன.

⇒ **பழக்கவழக்கங்கள்**

- தீ மூட்டக் கல்லை உரசுவது.
- நேரத்தையும் காலத்தையும் நிலவு, விண்மீன்கள், கோள்கள், மலர்கள் பூக்கும் வேளை ஆகியவற்றைக் கொண்டு கணக்கிடுவது.
- இறந்தோரை முதுமக்கள் தாழியில் இட்டுப் புதைப்பது.
- வீட்டிற்கு வெளியே வந்து விருந்தினரை வழியனுப்புவது போன்ற பழக்கங்கள் இருந்தன.

**விழாக்கள்**

**அறுமீன் சேரும் அகலிரு நடுநாள்**
**மறுகு விளக்குறுத்து மாலை தூக்கி**

**– அகநானூறு 141**

**பொருள்:**

- வானில் சிறு முயலாகிய மறுவின் நிறம் விளங்கித் தோன்ற, மதிநிறந்த கார்த்திகை நன்னாளில், இருள் அகன்ற நள்ளிரவில், வீதிகளில் திருவிளக்குகள் ஏற்றப்பட்டன மாலைகள் தொங்கவிடப்பட்டன.
- அறுமீன் – கார்த்திகை
- மறுகு – தெரு
- தூக்குதல் – தொங்கவிடுதல்
- 'வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
  வெறியாட்டு அயா்ந்த காந்தளும்

**– தொல்.புறத்திணையியல்**

- **பொருள்:** வெறியாடலின் சிறப்பினை அறிந்த கொடிய வாயினை உடைய வேலன் ஆடிய காந்தளும்.

⇒ **<u>தமிழரின் வழிபாட்டு முறைகள்</u>**

✓ **<u>திணை நிலத் தெய்வ வழிபாடு</u>**

- குறிஞ்சி– முருகன்
- முல்லை– திருமால்
- மருதம்– இந்திரன்
- நெய்தல்– வருணன்
- பாலை– கொற்றவை
- வெற்றியை கொண்டாடவும் கொற்றவை வழிபாடு இருந்தது.

✓ **<u>இயற்கை வழிபாடு :</u>**

ஞாயிறு, நிலவு, நெருப்பு

✓ **<u>நடுகல் வழிபாடு :</u>**

போரில் விழுப்புண்ணோடு இறந்துவிட்ட வீரா்களுக்கு செய்வது நடுகல் வழிபாடு.

⇒ **<u>வழிபாடு:</u>**

"நல்லமா்க் கடந்த நாணுடை மறவா்
பெயரும் பீடும் எழுதி அதா் தொறும்
பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்"

**– அகநானூறு 67**

**பொருள்:**

தம் ஆநிரைகளை மீட்க வேண்டிய வெட்சியாருடன் நற்போரிட்டு வென்று வீரமரணமடைந்த மானம் மிகுந்த மறவா்களுடைய பெயரினையும், சிறப்பினையும் நடுகற்களில் பொறித்தனா்.

⇒ **<u>ஆடை அணிகலன்கள்</u>**

**ஆடவா்**

- இடையில் ஓா் ஆடையும், மேலே ஒரு துண்டும் அணிந்தனா்.
- ஒரு சிலா் மேற்சட்டை அணிந்தனா். மேற்சட்டை 'கஞ்சுகம்' எனப்பட்டது.

**பெண்டீா்:**

- புடவை அணிந்தனா் பட்டு, பருத்தியாலான ஆடைகளை அனைவரும் அணிந்தனா்.
- மெல்லிய இழைகளால் நெய்யப்பட்ட ஆடைகள் பாம்பின் சட்டையைப் போலவும், புகையைப் போலவும், பாலாவி போலவும் விளங்கியதாக சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.
- துணிகளுக்கு வண்ணம் ஏற்றும் கலையையும் பழந்தமிழா் அறிந்திருந்தனா்.
- துணி தைப்பவரை துன்னக்காரா் என்று அழைத்தனா்.

**"புகைவிரிந்தன்ன பொங்கு துகில் உடீஇ"**

**– புறம். 398**

**பொருள்:**

தன் இடையில் உடுத்திருந்த புகையை, விரித்தாற் போன்ற உயர்ந்த உடையைத் தந்து என்னை உடுப்பித்தான்.

**"ஆவியன்ன அவிர் நூற் கலிங்கம்"**

**– பெரும்பாணாற்றுப்படை**

**பொருள்:**

உடலுக்கியைப் பாலாவியை ஒத்த நூலாற் செய்த துகில்களை உடுக்கச் செய்வான்.

✓ கலிங்கம்– உடை

⇒ **<u>பெண்கள் அணிந்த அணிகலன்கள்</u>**

- சிலம்பு
- மேகலை
- குழை
- மோதிரம்
- கடகம்

⇒ **<u>சிறுவர் அணிந்த அணிகலன்</u>**

- ஐம்படைத்தாலி (கழுத்தணி)

⇒ **<u>பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டுகள்:</u>**

- ஏறு தழுவுதல்
- மற்போரிடல்
- கோழிச்சண்டை
- ஆட்டுக்கிடாய் சண்டை நடைபெற்றது என சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.
- யானைச் சண்டை நடைபெறுவதும் வழக்கத்தில் இருந்துள்ளது.

⇒ **<u>பெண்களின் விளையாட்டுகள்:</u>**

- கழங்காடல், அம்மனை, பந்தாடுதடுதல், ஓரையாடுதல்
- நகர்ப்புற மக்கள் மேடை அமைத்து இசை, நாட்டியம், நாடகம் ஆகியவற்றை காண்பதை பொழுதுபோக்காக கொண்டிருந்தனர்.

⇒ **<u>தமிழர் உணவு :</u>**

- பண்டைத் தமிழர் உணவு இயற்கை உணவாகவும், உடலை பாதுகாக்கும் மருந்தாகவும் இருந்தது.
- அவரவர் வாழ்விடத்திற்கேற்ப உணவு வேறுபட்டது.
- காய்கனி, இறைச்சி என இரு வகை உணவையும் உட்கொண்டனர்.
- நெல்சோற்றை நண்டு கறியோடும், காய்கறியோடும் உண்டனர்.
- கடுகு இட்டு தாளிக்கும் பழக்கம் இருந்தது.
- ஊறுகாய் போடும் பழக்கமும் நடைமுறையில் இருந்தது.
- அரிசி, தினை, வரகு போன்றவற்றையும் உண்டனர்.

**அவைப்பு மாண் அரிசி அமலை வெண்சோறு**
**சுவைத்தாள் அலவன் கலவையொடு**
**பெறுகுவீர்"**

**–சிறுபாணாற்றுப்படை அடி 194, 195**

**பொருள்:**

குற்றப்பட்ட சிறந்த வெண்சோற்றுக் கட்டியை நண்டினது கலவையோடு உண்ணத் தருவாள்.

⇒ **<u>பண்டைத் தமிழர் திருமண முறை</u>**

- அகவாழ்வை பாடுவது அன்பின் ஐந்திணை எனப்பட்டது.
- பெண்ணுக்கு மணமகன் பரிசம் அளிப்பதும், மன நிகழ்வின்போது மணமக்களை நெல்லும், மலரும் கலந்த நீரால் நீராட்டி தூய ஆடை அணிகலன்களை அணிவிப்பதும், மணமுழவு ஒலிக்க மணமகளை தலைவனிடம் தந்து மூத்தோர் வாழ்த்துரை வழங்குவதும் வழக்கத்தில் இருந்தது.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**"சிறுவளை விலையெனப் பெருந்தேர் பண்ணிஎம்**
**முன்கடை நிறீஇச் சென்றிசி னோனே"**
**– நற்றிணை 300**

**பொருள்:**

"வரைவு வேண்டி அயலான் ஒருவன் தலைவியின் வளைக்கு விலை இதுவென்று" கூறி தன் தேரை இம்முன்றிலில் நிறுத்தி போயினான்.

⇒ **இல்லறம்**

- இல்லறத்தாரின் தலையாயக் கடமைகள் விருந்தோம்பல், சுற்றம் தழுவல், வறியோர் துயர் துடைத்தல்.
- தமிழர் தம் இல்வாழ்க்கை அன்பின் வழியதாகும். தலைவன் தலைவியர் செம்புலப் பெயல் நீர் போல் அன்புடை நெஞ்சம் கலந்து வாழ்ந்தனர்.
- இம்மை மாறி, மறுமை ஆயினும் நீயாகியர் என் கணவர் என மனைவியும், நரைமுடி வரினும் தலைநாள் போன்ற அன்போடு மனைவியை போற்றி கணவரும் வாழ்ந்தனர்.
- அறிவறிந்த மக்களை பெறுவது இல்லறத்தின் நற்பேறு என வாழ்ந்தனர்.

**இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்**
**அசையுடன் இருந்தோர்க்கு**
**அரும்புணர்வு இன்மென**
**– நற்றிணை 214**

**பொருள்**

இசை, இன்பம் இரந்தோர்க்கு ஈதல் வேண்டும் முதலான மூன்று காரணங்களால் தலைமகன் பொருள் வயிற் பிரிந்தான்.

⇒ **தமிழரின் குடும்ப முறை**

- இன்று வழக்கிலுள்ள திருமணம் குடும்பம் இரண்டு சொற்களுமே தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும் இடம் பெறவில்லை.
- குடும்பம் என்ற சொல் முதன்முதலாக திருக்குறளில் தான் கையாளப்பட்டுள்ளது.

⇒ **திருக்குறள்– குடிசெயல்வகை**

**இடும்பைக்கே பொள்கலங் கொல்லோ**
**குடும்பத்தைக் குற்றம் மறைப்பான் உடம்பு**
**– குறள் 1029**

- குடும்பம் என்ற சொல்லோடு தொடர்புடைய குடம்பை, குடும்பு, கடம்பு ஆகியவை சங்க இலக்கியங்களில் உள்ளன.
- "குடம்பை" என்ற சொல் இருபது இடங்களில் கையாளப்பட்டுள்ளது.
- தொல்காப்பியம் இல், மனை ஆகிய இரண்டு வாழிடங்களை குறிப்பிடுகிறது.

**இரவுக்குறியே இல்லகத் துள்ளும்**
**மனையோர் கிளவி கேட்கும் வழியதுவே**
**மனையகம் புகாஅக் காலை யான**
**– தொல். பொருளியல்**

⇒ **சங்க இலக்கியங்களில் குடும்பங்களின் வாழ்விடங்களில் உள்ள வேறுபாடுகளை சுட்டும் சொற்கள்:**

1. இல்
2. மனை
3. குரும்பை
4. புலப்பில்
5. குடில்
6. வைப்பு
7. முற்றம்
8. நகர்
9. மாடம்
10. முன்றில்
11. கூரை

- மருதத் திணை பாடல் ஒன்றில் தம்மனை, நும்மனை என மகளிர் தன் இல்லத்தையும், கணவனின் நிலத்தையும் பிரித்து பேசும் பாங்கினை காண முடிகிறது.
- **புக்கில்** என்பது தற்காலிகமாகத் தங்கும் இடம் ஆகும்.
- தன்மனை என்பது திருமணத்திற்கு பின் கணவனும் மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து வாழும் இடம் ஆகும்.
- மணந்தகம் என்பது மணம் புரிந்த தம்பதியர் சேர்ந்து இல்லற வாழ்வில் ஈடுபடக்கூடிய காலகட்டம் ஆகும்.
- இளம் தம்பதியினருக்கு ஏற்ற அறிவுரைகள் கூறி நெறிப்படுத்தும் பணி செவிலிக்குரியது என தொல்காப்பியம் கூறுகிறது.

⇒ **தாய் வழிக் குடும்பம் :**

- சங்க காலத்தில் கண சமூகத்துக்கு தாயே தலைமையேற்றிருந்தாள்.
- பதிற்றுப்பத்துக் கூறும் சேரநாட்டு மருமக்கள் தாய முறை இதற்கு எடுத்துக்காட்டாகும்.

**எடுத்துக்காட்டு :**

| | |
|---|---|
| சிறுவர் தாயே பேரிற் பெண்டே | புறநானூறு |
| செம்முது பெண்டின் காதலஞ்சிறா அன் | புறநானூறு |
| வானாரைக் கூந்தல் முதியோள் சிறுவன் | புறநானூறு |
| முளரி மருங்கின் முதியோள் சிறுவன் | புறநானூறு |
| என்மகள் ஒருத்தியும் பிறள்மகன் ஒருவனும் | கலித் தொகை (பாலைத் திணை) |

- சங்ககாலத்தில் பெண் திருமணம் செய்த பின்னரும் தன் இல்லத்திலேயே தொடர்ந்து வாழ்க்கை நடத்தும் தாயமுறை இருந்துள்ளது.
- திருமணத்திற்கு பின் மனைவியின் இல்லத்திற்கு சென்று கணவன் வாழ்வது நடைமுறையாக இருந்துள்ளது. தாய்வழி முறையில் குடும்பத்தின் சொத்தும், வளங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன.

⇒ **தந்தை வழிக் குடும்பம்:**

- சங்ககாலத்தின் பிற்பகுதியில் தந்தை வழி சமூக முறை பரவலாக ஆரம்பித்தது.

**“நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்**
**எம்மனை வதுவை நல்மணம் கழிக”**

**– ஐங்குறுநூறு**




www.tnpscgroup4.in

எள்ளுப் பெயரன் | எள்ளுப் பெயர்த்தி

- திருமணம் ஆகி தலைவி, தலைவன் வீட்டிற்கு வந்தபோது அவனுடைய தாய் தலைவிக்கு சிலம்பு கழி நோன்பினை செய்கிறாள்.
- **“மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே”** என்ற குறுந்தொகை பாடல் மூலமும் பெண்கள் திருமணம் ஆகி கணவர் வீட்டுக்கு வந்தமை குறித்து அறிய முடிகிறது.

**குறிப்பு**

- தமிழர் குடும்ப முறை பற்றி இக்கட்டுரை பக்தவச்சல பாரதி என்பவரால் எழுதப்பட்டது.
- இவர் இலக்கிய மானிடவியல், பண்பாட்டு மானிடவியல், தமிழர் மானிடவியல், தமிழக பழங்குடிகள், பாணர் இனவரைவியல், தமிழர் உணவு உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

⇒ **<u>பழந்தமிழர் கல்வி:</u>**

- எண்ணும் எழுத்தும் கண்ணெனப் போற்றப்பட்டன. இவற்றுடன் வானியல், மருத்துவம் போன்றவையும் கற்பிக்கப்பட்டன.
- எக்குடிப் பிறப்பினும் யாவரே ஆயினும் அக்குடியில் கற்றோரை மதித்தனர்.

⇒ **<u>கல்வி கற்கும் இடங்கள்:</u>**

- மரத்தடி
- ஊர் மன்றம்
- ஆசிரியர் வீடு
- வீட்டுத் திண்ணைகள்.

⇒ **<u>பழந்தமிழரின் தொழில்கள்</u>**

- தச்சு தொழில் மேலோங்கி இருந்தது. தேர், வண்டி, நாவாய்கள், படகுகள், வீடுகளுக்கான தூண்கள், கதவுகள், கட்டில்கள் முதலான பல பொருள்கள் செய்யப்பட்டன.
- இரும்பாலும், பொன்னாலும் கருவிகள் நகைகள் செய்யப்பட்டன.
- நெய்தல் தொழில் மேம்பட்டு இருந்தது.
- உமணர் ஊர் ஊராகச் சென்று உப்பு வணிகம் செய்தனர்.
- மீன்பிடித்தொழில் பற்றிய குறிப்புகள் மிகுதியாக காணப்படுகின்றன.
- இசை கலைஞர்கள் ஆகியோர் தங்கள் பெயரில் இலக்கியங்கள் படைக்கப்படும் அளவு சமூகத்தில் புகழ் பெற்றிருந்தனர்.

⇒ **<u>கல்வி</u>**

**“பல்கேள்வித் துறைபோகிய**
**தொல்லாணை நல்லாசிரியர்**
**உறழ் குறித் தெடுத்த உருகெழுகொடியும்”**
**– பட்டினப்பாலை அடி 169 முதல் 171**

**பொருள்:**

பலவாறு கேட்டறிந்தும், பல நூல்களை முழுமையாக் கற்று அறிந்தும், பெரிய ஆணையை உடைய நல்லாசிரியர்கள் பிறரிடம் வாது புரிவதற்காக நாட்டி வைத்த கொடிகள் பலருக்கும் அச்சத்தை தருவன.

⇒ **<u>தமிழர் கலைகள்:</u>**

- இசை, நாட்டியம், நாடகம், ஓவியம், சிற்பம் போன்ற பல்வேறு கலைகளும் அவற்றிற்கான இலக்கண நூல்களும் தொன்மைத் தமிழகத்தில் இருந்தன.
- ஐவகை நிலத்திற்கும் தனித்தனியே பண் வகை, யாழ், பறை போன்றவை இருந்தன.
- பாணின், பாடினி முதலிய இசைக்கலைஞர்கள் சிறப்பு பெற்றிருந்தனர்.

www.tnpscgroup4.in

- மண்ணாலும், மரத்தாலும், தங்கத்தாலும் ஆன சிற்பங்களை அமைத்தனர்.
- கூத்துக்கலை சிறப்புடன் விளங்கியது. கூத்தர், விறலியர் முதலிய கலைஞர் பலர் சிறப்புடன் வாழ்ந்து இருந்தனர்.
- **வேத்தியல் :** மன்னர்க்குரிய கூத்து.
- **பொதுவியல் :** மற்றையோர்க்குரிய கூத்து.

⇒ **தமிழர்களின் அறம்**

- சங்ககால வாழ்க்கையில் இருந்து உருவான அறங்களே சங்க இலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- சங்க அறங்கள் சமயங்களிடமிருந்து இரவல் பெறப்பட்டவை அல்ல.
- சங்க காலத்திற்கு பிந்தைய அற இலக்கியங்களின் காலம் அறநெறிக்காலம் எனப்படுகிறது.

⇒ **அறத்தில் வணிக நோக்கம் கொள்ளாமை :**

- இப்பிறப்பில் அறம் செய்தால் அதன் பயனை மறுபிறப்பில் பெறலாம் என்ற வணிக நோக்கு இருக்கக் கூடாது என்பது சங்ககால மக்களின் கருத்தாக இருந்தது.

⇒ **புறநானூறு**

**"இம்மை செய்தது மறுமைக்கு ஆம் எனும்**

**அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்"**

**என்று முடமோசியர் சங்க கால வள்ளல்களில் ஒருவரான ஆய் பற்றி கூறியுள்ளார்.**

⇒ **அரசியல் அறம் :**

**"அறநெறி முதற்றே அரசின் கொற்றம்'**

**'அறன்நெறி பிழையாத் திறனறி மன்னர்"**

- மன்னர்களுடைய செங்கோலும் வெண்குற்றார் குடையும் அறத்தின் குறியீடுகளான போற்றப்பட்டன.
- குற்றங்களை, அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும் என்கிறார் ஊன் பொதி பசுங்குடையார்.

⇒ **அரசனின் கடமை :**

- நீர்நிலைப் பெருக்கி நிலவரம் கண்டு, உணவு பெருக்கம் காண்பதும், அதனை அனைவருக்கும் கிடைக்கச் செய்வது ஆகும்.

⇒ **அமைச்சர்களின் கடமை:**

**"நன்றும் தீதும் ஆய்தலும் அன்பும் அறனும் காத்தலும் அமைச்சர் கடமை"**

- என்கிறது மதுரைக்காஞ்சி. "**செம்மை சான்ற காவிதிமாக்கள்**" என்று அமைச்சர்களை **மாங்குடி மருதனார்** போற்றுகிறார்.

⇒ **அறம் கூறு அவையம்:**

- அரசனின் அறநெறி ஆட்சிக்கு அறம் கூறு அவையங்கள் துணை புரிந்தன.
- இவை பற்றி '**அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்**' என்கிறது புறநானூறு.
- உறையூரில் இருந்த அற அவையம் தனிச்சிறப்புப் பெற்றது என இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.
- மதுரையிலிருந்து அவையம் துலாக்கோல் போல் நடுநிலை மிக்கது என மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது.

⇒ **போர் அறம்:**

- வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்து போர் செய்தல் கூடாது.

- போர் கொடுமையில் இருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரை பெறாதவர் ஆகியோரை காப்பாற்ற வேண்டும்.

**“எறியார் எறிதல் யாவணது எறிந்தார்**
**எதிர்சென்று எறிதலும் செல்லான்”**

**– புறநானூறு**

- தம்மை விட வலிமை குறைந்தவரோடு போர் செய்வது கூடாது என்பதை **ஆவூர் மூலங்கிழார்** குறிப்பிட்டுள்ளார்.

⇒ **கொடை**

**செல்வத்தின் பயனே ஈதல்**
**துய்ப்போம் எனினே தப்புந பலவேறு**

**– புறநானூறு**

- இன்று மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரர் கூறியுள்ளார்.
- கொடையின் சிறப்பால் வள்ளல் எழுவர் போற்றப்பட்டனர்.
- எழுவரின் கொடைச்சிறப்பு பற்றி சிறுபாணாற்றுப்படையிலும் பெருஞ்சித்திரனார் பாடலிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.
- பதிற்றுப்பத்து சேர அரசர்களின் கொடை பண்பு குறித்து கூறுகிறது. **‘இல்லோர் ஒக்கல் தலைவன்’, ‘பசிப்பிணி மருத்துவன்’** என்றெல்லாம் வல்லுநர்கள் போற்றப்பட்டனர். வழங்குவதற்குப் பொருள் உள்ளதா ? என்று கூடப் பார்க்காமல் கொடுக்கும் பிடவூர்க் கிழான் மகன் பெருஞ்சாத்தனை நக்கீரர் பாராட்டுகிறார்.
- உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன் என்று ஔவையார் பாராட்டுகிறார். இரவலர் வராவிட்டாலும் அவர்களை தேடி வரவழைத்தல் **ஆடு கோட்பாட்டுச் சேரலாதனின்** இயல்பு என்று நற்செள்ளையார் கூறுகிறார்.
- மறுமை நோக்கி கொடுக்காதவன் **பேகன்** என்று பாராட்டுகிறார் பரணர்.
- தன்னை நாடி வந்த பரிசிலன் பொருள் பெறாமல் திரும்புவது, தான் நாட்டை இழந்து துன்பத்தை விடப் பெருந்துன்பம் என குமணன் வருந்தியதாக பெருந்தலைச் சாத்தனார் குறிப்பிட்டுள்ளார்.
- எல்லாவற்றையும் கொடுப்பவன் என்று **மலையமான் திருமுடிக்காரியை** கபிலர் பாராட்டுகிறார். வள்ளல்கள் மட்டுமின்றி புலவர்களும் ஈந்து மகிழ்ந்ததை இலக்கியம் பதிவு செய்துள்ளது.
- தான் பெற்றதை பிறருக்கு வழங்கும் **பெருஞ்சித்திரனாரின்** பேருள்ளம் குறித்து புறநானூறு கூறுகிறது.

⇒ **உதவி**

**“பிறர் நோயும் தம் நோய்போல் போற்றி**
**அறன்அறிதல் சான்றவர்க்கு எல்லாம் கடன்”**

**–கலித்தொகை**

என்று பிறர் துன்பத்தை தம் துன்பமாக கருதி, உதவுதல் பற்றி நல்லந்துவனார் குறிப்பிடுகிறார்.

**சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்**
**புன்கண் அஞ்சும் பண்பின்**
**மென் கண் செல்வம் செல்வம் என்பதுவே**

**– நற்றிணை.**

- என்ற பாடலில் உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பது தான் என்கிறார் நல்வேட்டனார்.

⇒ **வாய்மை**

- வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்ற கருத்தை **‘பொய்யாச் செந்நா’**

'பொய்படுபறியா வயங்கு செந்நா' இலக்கியங்கள் கூறுகின்றன.

- **'பிழையா நன்மொழி'** என்று வாய்மையையும், **'பொய் மொழிக் கொடுஞ்சொல்'** என்று பொய்யையும் நற்றினை குறிப்பிடுகிறது.

⇒ **தமிழர்களின் விருந்தோம்பல்**

தமிழர்களின் விருந்தோம்பல் பண்பு மிகவும் சிறப்பானது. உறவினர் வேறு, விருந்தினர் வேறு முன்பின் அறியாத புதியவர்களே விருந்தினர் ஆவர். விருந்தினர்களை ஆதரிப்பதே விருந்தோம்பல் ஆகும்.

⇒ **தமிழர் மரபான விருந்தோம்பல் குறித்த இலக்கியச் செய்திகள்:**

1. **திருக்குறள்:**

திருவள்ளுவர் 'விருந்தோம்பல்' என்று ஓர் அதிகாரத்தையே இல்லறவியலில் அமைத்துள்ளார். முகம் வேறுபடாமல் மலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்பதை **'மோப்பக் குழையும் அனிச்சம்'** என்ற குறளில் கூறியுள்ளார்.

2. **சிலப்பதிகாரம்:**

**"..................தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"**

கோவலனைப் பிரிந்து வாழும் கண்ணகி, அவனைப் பிரிந்ததை விட விருந்தினரைப் போற்ற முடியாத நிலையை எண்ணி வருந்துகிறாள்.

3. **கம்பராமாயணம்:**

**"பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்து அன்றி விளைவன யாவையே"**

கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள் விருந்து ஈகையும் செய்வதாக கம்பர் குறிப்பிட்டுள்ளார்.

4. **கலிங்கத்துப்பரணி:**

**"விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண
மேன்மேலும் முகமலரும் மேலோர் போல"**

விருந்தினருக்கு உணவிடுவோரின் முகம் மலர்ச்சியை உவமையாக்கி உள்ளார் ஜெயங்கொண்டார்.

5. **புறநானூறு:**

**"உண்டால் அம்ம, இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும், இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே................"**

அமிழ்தமே கிடைத்தாலும் தனித்து உண்ணார் தமிழர் என்று கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி குறிப்பிட்டுள்ளார்.

6. **நற்றிணை:**

**"அல்லில் ஆயினும் விருந்து வரின்
உவக்கும்"**

நள்ளிரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவளித்தாள் குடும்ப தலைவி.

⇒ **இன்மையிலும் விருந்தோம்பல்:**

இம்மையிலும் (வறுமையிலும்) தமிழர் விருந்தோம்பலை சிறப்பாக செய்தனர்.

- **எடுத்துக்காட்டு :**

1. புறநானூறு

**"குரல் உணங்கு விதைத் தினை உரல்வாய்ப் பெய்து சிறிது புறப்பட்டன்றோ இலள்"**

தானியம் ஏதுமில்லாத வரிய நிலையிலும், விதைக்காக வைத்திருந்த திணையை உரலில் இட்டு குத்தி எடுத்து, விருந்தினருக்கு விருந்தளித்தாள் குடும்ப தலைவி.

- புறநானூறு

**"நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்**


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**இரும்புடைப் பழவாள் வைத்தனன் இன்றுஇக்**

**கருங்கோட்டு சீரியாழ் பணையம்"**

நேற்று வந்த விருந்தினை பேணுவதற்கு பொருள் தேவைப்பட்டதால் தன்னுடைய இரும்பு வாலை அடகு வைத்த தலைவன், இன்று வந்து விருந்தினரை பேணுவதற்கு தன்னுடைய கருங்கோட்டு சீரியலை பணையம் வைத்தான்.

**2. பெரியபுராணம்**

இளையான்குடி மாறநாயனாரின் வீட்டுக்கு வந்த சிவனடியாருக்கு விருந்தளிக்க தானியம் இல்லாததினால், அவர் அன்று விதைத்த நெல்லை மீண்டும் அரித்து வந்து சமைத்து விருந்து படைத்தார்.

**3. சிறுபாணாற்றுப்படை:**

நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்று குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர் என்று கூறுகிறது.

**4. குறுந்தொகை:**

**"பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்**

**வருவீர் உளீ ரோ"**

இல்லத்தின் பெரிய வாயிலை இரவில் மூடுவதற்கு முன், உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா? என கேட்கும் வழக்கம் தமிழரிடையே இருந்தது.

**5. கொன்றை வேந்தன்:**

**"மருந்தே ஆயினும் விருந்தோடுஉண்"**

**– ஔவையார்**

- **ஔவையாரின் தனிப்பாடல் :**

**'வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்**

**முரமுரெனவே புளித்த மோரும் – திறமுடனே**

**புல்வேளூர்ப் பூதன் புரிந்துவிருந்து இட்டான் ஈது**

**எல்லா உலகம் பெறும்".**

⇒ **தமிழர்களின் வீர விளையாட்டு**

**ஏறு தழுவுதல் :**

'ஏறுதழுவுதல்' என்ற வீர விளையாட்டு முல்லை மற்றும் மருத நிலங்களில் கால் கொண்டு தமிழர் தம் வாழ்வோடு பின்னிப்பிணைந்ததாகும்.பல நூற்றாண்டுகளாக தமிழர் அடையாளமாகவே வீர விளையாட்டு அறியப்படுகிறது.

⇒ **இலக்கிய, இலக்கண நூல்கள்:**

சிலப்பதிகாரம் என்ற இலக்கியத்திலும், புறப்பொருள் வெண்பா மாலை என்ற இலக்கண நூலிலும் ஏறுகோள் குறித்து கூறப்பட்டுள்ளது.

⇒ **சங்க இலக்கியங்களில் ஏறுதழுவுதல்**

**எழுந்தது துகள்,**
**ஏற்றனர் மார்பு**
**கவிழ்ந்தன மருப்பு,**
**கலங்கினர் பலர்"**

**- கலித்தொகை 102: (அடி 21 முதல் 24)**

**பொருள்**

எங்கனம் புழுதி துகள் எழுந்தது ஆயர் மார்புகளை காட்டி நின்றனர். ஏறுகளின் கொம்புகளும் குத்துவதற்கு கீழே தாழ்ந்தன. தழுவினார் பலரும் கலங்கி போயினர்.

**சிற்றிலக்கியம்**

'பள்ளு' என்ற சிற்றிலக்கியத்தில் ஏறுதழுவுதல் பற்றிய குறிப்புகள் உள்ளன.

- 'கண்ணுடையம்மன் பள்ளு' என்ற நூலில் ஏறு தழுவுதல் 'எருது கட்டி' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

⇒ **தொல்சான்றுகள்:**

**1. சேலம் மாவட்டம்:**


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

எருது விளையாடி மரணமுற்றவன் பெயரால் எடுக்கப்பட்ட 'எருது பொருதார் கல்' ஒன்று உள்ளது.

**2. கருவந்துறை:**

இங்குள்ள நடுக்கலில் "கோவிரிச் சங்கன் கருவந்துறையிலே எருது விளையாடி பட்டான் சங்கன் மகன் பெரிய பயலு நட்ட கல்லு" என்று பொறிக்கப்பட்டுள்ளது.

**3. நீலகிரி மாவட்டம்:**

இங்கு கோத்தகிரி அருகே உள்ள கருக்கையூறில் கூறிய கொம்புகளும், சிலிர்த்த திமில்களும், கொண்ட மூன்று எருதுகளைப் பலர் கூடி விரட்டுவது போன்ற பண்டைய ஓவியம் கண்டறியப்பட்டுள்ளது.

**4. மதுரை மாவட்டம்:**

இங்கு உசிலம்பட்டி அருகே உள்ள கல்லூத்து மேட்டுப்பட்டியில் பெரிய திமிலுடன் கூடிய காளையை, ஒருவர் அடக்க முயல்வது போன்ற பண்டைய ஓவியம் கண்டறியப்பட்டுள்ளது.

**5. தேனி மாவட்டம்:**

இங்கும் மயிலாடும் பாறை அருகே சித்திரக்கல் புடவியில் திமிலுடன் கூடிய காளை ஓவியம் கண்டறியப்பட்டுள்ளது.

⇒ **சிந்துவெளி நாகரிகம்:**

சிந்துவெளி அகழாய்வுகளில் மாடு தழுவும் **'கல்முத்திரை'** ஒன்று தமிழர்களின் பண்பாட்டுத் தொல்லியல் அடையாளமான ஏறுதழுவுதலைக் குறிப்பதாக ஐராவதம் மகாதேவன் குறிப்பிட்டுள்ளார்.

⇒ **பண்பாட்டு அடையாளம்**

ஏறு தழுவுதல் என்பது முல்லை நிலத்து மக்களின் அடையாளத்தோடும், மருத நிலத்து வேளாண் குடிகளின் தொழில் உற்பத்தியோடும் பாலை நிலத்து மக்களின் போக்குவரத்து தொழிலோடும் பின்னிப் பிணைந்தது.

உழவு மாடுகளின் வேறு பெயர்கள் ஏர் மாடுகள், எருதுகள், ஏறுகள்.

⇒ **ஏறு தழுவுதலின் வேறு பெயர்கள்**

மாடு பிடித்தல், மாடு அணைத்தல், மாடு விடுதல், மஞ்சுவிரட்டு, எருது கட்டி, காலை விரட்டு, ஏறு விடுதல், சல்லிக்கட்டு.

⇒ **சல்லிக்கட்டு பெயர் காரணம்**

சல்லி என்பது மாட்டின் கழுத்தில் கட்டப்படுகின்ற புளிய கொம்பினால் ஆன வளையத்தை குறிக்கும். அக்காலத்தில் புழக்கத்தில் இருந்த சல்லி நாணயங்களை துணியில் முடிந்து மாட்டின் கொம்புகளில் கட்டி விடுவார்கள். மாட்டை தழுவி வெற்றியடையும் வீரருக்கு அப்பணமுடிப்பு சொந்தமாகும். இக்காலத்தில் சல்லிக்கட்டு பேச்சு வழக்கில் ஜல்லிக்கட்டு எனப்படுகிறது.

⇒ **ஏறு தழுவுதலில் தமிழரின் அறம்**

தமிழகத்தில் ஏறு தழுவுதலில் எந்த ஆயுதமும் பயன்படுத்தப்படுவதில்லை. நிகழ்வின் தொடக்கத்திலும், முடிவிலும் காளைகளுக்கு வழிபாடு செய்வர். அன்பும், வீரமும் ஒன்று சேர்ந்த விளையாட்டாக ஏறுதழுவுதல் தமிழகத்தில் 2000 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது.

**"நீறு எடுப்பவை, நிலம் சாடுபவை**

**மாறுஏற்றுச் சிலப்பவை மண்டி பாய் பவையாய்**

**துளங்கு இமில் நல்ஏற்றினம் பல களம்புகும்**

**மல்லர் வனப்பு ஒத்தன"**

**- கலித்தொகை (106 அடி 7–10)**

**பொருள்:**

கொழுத்த திமிருடன் விளங்கும் நல்ல ஏற்றினங்கள் காலாலே தரையை கிளறி புழுதியை எழுப்பின மழை பெய்த மையால் ஈர மண்ணை கிளறி சாடின ஒன்றோடு ஒன்று மாறுபட்டு சந்தையிட்டன அவையெல்லாம் போர்க்களம் புகும் அழகை ஒத்து விளங்கின.

⇒ **மேலை நாடுகளில் ஏறுதழுவுதல்**

எகிப்தில் உள்ள பெனி–ஹாசன் சித்திரங்களிலும், கிரீட் தீவில் உள்ள **கினோஸஸ்** என்னும் இடத்தில் உள்ள அரண்மனை சித்திரங்களிலும், காளை போர் குறித்த செய்திகள் காணப்படுகின்றன.

காளைச் சண்டையை தேசிய விளையாட்டாக கொண்டிருக்கும் ஸ்பெயின் நாட்டில், காளையைக் கொன்று அடக்குபவனே வீரனாவான். அவ்விளையாட்டில் ஆயுதங்களை பயன்படுத்துவார்கள்.

⇒ **தமிழர் வணிகம்**

- பழந்தமிழர் அறத்தின் வழியே வணிகம் செய்தார்கள். பொருள் தேடுவது ஒன்றையே குறிக்கோளாக கொள்ளாதவர்கள்.
- அவர்கள், கொள்வதும் மிகைக் கொளாது, கொடுப்பதும் குறைப்படாது வணிகம் செய்தார்கள்.
- உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பொருளீட்டினார்கள். நெல், கம்பு, சோளம், கேழ்வரகு, திணை, சாமை, வரகு முதலிய தானிய வகைகளையும், உளுந்து, கடலை, அவரை, துவரை, தட்டை, கொள்ளு, எள்ளு முதலிய பருப்பு வகைகளையும் தமிழர்கள் விற்றார்கள்.
- கடல் வாணிகத்திலும் தமிழர் சிறந்திருந்தனர். பொன்னும், மணியும், முத்தும், துகிலும் கொண்டு கடல் கடந்து வணிகம் செய்தனர். பண்டைய தமிழகத்தில் துறைமுக பட்டினங்கள் அதிகமாக இருந்தன.
- பூம்புகார் முதலான பெருநகரங்கள் வணிகர்கள் வாழும் இடங்களாய் இருந்தன. கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே கிரேக்கம், உரோமபுரி, எகிப்து ஆகிய நாடுகளுக்கு தமிழகத்தில் இருந்து அரிசியும், மயில் தோகையும், சந்தனமும் ஏற்றுமதி செய்யப்பட்டன.
- கி.மு. பத்தாம் நூற்றாண்டில் அரசன் சாலமனுக்கு யானை தந்தமும், மயில் தோகையும், வாசனைப் பொருளும் தமிழகத்தில் இருந்து அனுப்பப்பட்டன.
- தமிழர்களுக்குச் சாவக நாட்டுடனும் கடல் வணிகத் தொடர்பு இருந்தது.

**“தந்நாடு விளைந்த வெண்ணெல் தந்து**
**பிறநாட்டு உப்பின் கொள்ளைச் சுற்றி**
**................. உமணர் போகலும்”**

**- நற்றினண 183**

**“பாலொடு வந்து கூழொடு பெயரும்”**

**- குறுந்தொகை 23**

**“பொன்னோடு வந்து கறியோடு பெயரும்...”**

**- அகநானூறு 149**

- மேற்கண்ட சங்க இலக்கிய வரிகள் மூலம் பண்டைத் தமிழர் பண்டமாற்று முறையில் வணிகம் செய்தனர், என்பதை அறிய முடிகிறது.

www.tnpscgroup4.in

- தரைவழி வணிகம், நீர்வழி வணிகம் என்ற இரண்டு முறையில் வணிகம் செய்தனர்.
- தரைவழி வணிகத்தில் வணிகர்கள் வண்டிகளில் பொருள்களை ஏற்றி வெளியூருக்கு செல்லும்போது குழுவாகவே செல்வார்கள். இக்குழுவை வணிக சாத்து என்பர்.

**“வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**
**பிறவும் தமபோல் செயின்”**

**- திருக்குறள்.**

**“நடுவு நின்ற நன்னெஞ்சினோர்”**

**- பட்டினப்பாலை**

மேற்கண்ட பாடல் வரிகள் தமிழக வணிகரின் நேர்மையை பற்றி கூறுகின்றன.

⇒ **<u>சேரர்களின் வணிகம் :</u>**

- உள்நாட்டு, வெளிநாட்டு வணிகத்தில் தமிழர்கள் சிறந்து விளங்கினர். கடல் வணிகத்தில் சேர நாடு சிறப்புற்று இருந்தது. அதற்கு காரணம் சேர நாட்டின் இயற்கை அமைப்பு ஆகும்.
- சேரர்கள் வலிமை மிகுந்த கடற்படையை வைத்திருந்தனர். செங்குட்டுவனின் கடற் போர் வெற்றியால் அவன் கடல் பிறகோட்டிய செங்குட்டவன் என அழைக்கப்பட்டான்.
- கடம்பர் எனப்பட்ட கடற்கொள்ளையர்களை சேர மன்னர்கள் அடக்கியதால் கடல் வணிகம் செழித்து விளங்கியது.
- முசிறி சேரர்களின் சிறந்த துறைமுகங்களுள் ஒன்றாக விளங்கியது.இங்கிருந்து தான் அயல்நாடுகளுக்கு மிளகு, முத்து, யானை தந்தங்கள், பட்டு, மணி போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன.
- பொன், மென்மையான புடவைகள், சித்திர வேலைபாடு அமைந்த ஆடைகள், பவளம், செம்பு, கோதுமை ஆகியவை இறக்குமதி செய்யப்பட்டன. இச்செய்தியை,

**“ மீனோடு நெற்குவைஇ**

**மிசையம்பியன் மனைமறுக்குந்து**

**...................**

**...................**

**கலந்தந்த பொற்பரிசம்**

**கழித்தோணியால் கரைசேர்க்குந்து”**

என்ற புறநானூறு 343-ஆம் பாடல் விளக்குகிறது.

மக்கள் தத்தம் பொருள்களை தந்து தமக்கு தேவையான பொருளை பெற்றனர் விலையை கணக்கிட நெல்லேஅடிப்படையாக இருந்தது. உப்பும், நெல்லும் ஒரே மதிப்படையானவாக இருந்தன என்பதை

**“நெல்லும் உப்பும் நேரே ஊரீர்**

**கொள்ளீ ரோவெனச் சேறிதொறும் நுவலும்”**

என்ற அகநானூறு 390-ஆம் பாடல் விளக்குகிறது.

⇒ **<u>கடற்பயணங்கள்</u>**

- தமிழ்நாட்டு வணிக வரலாறு தொன்மை வாய்ந்தது.
- பழங்காலத் தொட்டே உள்நாட்டு, அயல்நாட்டு வணிகத்தில் தமிழர் சிறப்புற்றிருந்தனர்.
- உள்நாட்டு வணிகத்தை விட அயல் நாட்டு வணிகத்தில் அதிலும் கடல் வணிகம் மிகவும் சிறப்புற்று இருந்தது.

⇒ **<u>தமிழர்களின் பன்னாட்டு தொடர்பை விளக்கும் மொழிகள்:</u>**


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**“திரை கடல் ஓடியும் திரவியம் தேடு”**

**– ஔவையார்**

**“யாதும் ஊரே யாவரும் கேளிர்”**

**– கணியன் பூங்குன்றனார்**

⇒ **கடற்பயணம் பற்றிய தொல்காப்பிய குறிப்புகள்:**

| | |
|---|---|
| வெளிநாடுகளில் இருந்து கடல் வழி வந்தவை. | குதிரைகள் |
| உள்நாட்டில் இருந்து தரைவழி வந்தவை. | கறி (மிளகு) |
| வடமலையிலிருந்து வந்தவை. | |
| மேற்கு மலையில் இருந்து வந்தவை. | மெருகிடப்பட்ட பொன், மாணிக்ககற்கள் |
| தென்கடலில் இருந்து கிடத்தவை. | சந்தனம், ஆரம் |
| கீழ்கடலில் விளைந்தவை. | முத்து |
| வெளிநாடுகளில் இருந்து கடல் வழி வந்தவை. | பவளம் |

- கடற் பயணத்தை தொல்காப்பியம் ‘முந்நீர் வழக்கம்’ என்று குறிப்பிட்டுள்ளது.
- தொல்காப்பிய பொருளதிகாரம் ’பொருள் வயிற் பிரிவு’ இரு வகைப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது அவையாவன.
    - காலில் (தரைவழிப் பிரிதல்) பிரிவு,
    - கலத்தில் (நீர்வழி பிரிதல்) பிரிவு

⇒ **வணிக தொடர்புடைய நாடுகள்:**

கிரீசு, உரோம், எகிப்து, சீனம், பாலஸ்தீனம், மெசபடோமியா, பாபிலோனியா முதலியன தமிழரின் கடல் வணிகம் குறித்து பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன.

⇒ **ஏற்றுமதியான பொருள்கள்:**

இரத்தினம், முத்து, வைரம், மிளகு, கருங்காலி, கருமருது, தேக்கு, சந்தனம், வெண்துகில், அரிசி, ஏலக்காய், இலவங்கப்பட்டை, இஞ்சி, மயில்தோகை முதலானவை. இருப்பினும் ஏற்றுமதி பொருள்களில் முத்தே முதலிடம் பெற்றது.

⇒ **இறக்குமதியான பொருள்கள்:**

- சீனத்துப்பட்டு, சர்க்கரை, கண்ணாடி, கற்பூரம், குதிரைகள் (அரேபியா).
- அதியமானின் முன்னோர் காலத்தில் சீனாவில் இருந்து கரும்பு கொண்டு வரப்பட்டு பயிரிடப்பட்டது.
- தமிழர்கள், கிரேக்கர்களையும் உரோமானியரையும் ‘யவனர்’ என்று அழைத்தனர்.

⇒ **கடலைக் குறிக்கும் தமிழ் சொற்கள்:**

ஆழி, ஆர்கலி, முந்நீர், வாரணம், பௌவம், பரவை, புணரி.

⇒ **கலத்தை குறிக்கும் வேறு பெயர்கள்:**

- கப்பல், கட்டுமரம், நாவாய், படகு, பரிசில், புணை, தோணி, தெப்பம், திமில், அம்மி, வங்கம், மிதவை, பஃறி,ஓடம்.
- கடலில் செல்லும் பெரிய கலம் நாவாய் எனப்படும்.
- புகார் நகரத்தில் நிறுத்தப்பட்டிருந்த நாவாய்கள், அலைகளால் அசைவது கட்டுத்தறியில் கட்டப்பட்ட யானை அசைவது போலிருந்தது. **–பட்டினப்பாலை**



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- பெரிய நாவல்கள் பாய்மரக் கப்பல்கள் எனப்பட்டன.
- கரிகாலனின் முன்னோர் காற்றின் போக்கை அறிந்து கலம் செலுத்தினர் – **புறநானூறு**
- மருத நில அரசனது கோட்டை நான்கு புறமும் நீர் நிரம்பிய கழனிகள் நடுவில் அமைந்திருப்பது நடுக்கடலில் செல்லும் தமிழர்கள் கட்டிய கப்பலுக்கு உவமையாக புறநானூற்றில் கூறப்பட்டுள்ளது.

⇒ **<u>பழங்கால துறைமுகங்களும் நடைபெற்ற வணிகமும்:</u>**

⇒ **முசிறி:**

- இது சேர மன்னர்களுக்குரிய துறைமுகம் 'அங்குச் சுள்ளி' என்னும் பெரிய ஆற்றில் யவனர்களின் மரக்கலங்கள் பொன்னை சுமந்து வந்து, அதற்கு ஈடாக மிளகை சுமந்து செல்லும்'' – அகநானூறு.
- தமிழ்நாட்டின் மேற்கு கடற்கரை பகுதியில் சேரர்களின் ஆட்சி எல்லைக்குள் அமைந்த புகழ்பெற்ற துறைமுகம் முசிறி.
- இது மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து உருவான பேரியாறு கடலில் கலக்கும் இடத்தில் இயற்கையாய் உருவான துறைமுகம் ஆகும்.
- சேர நாட்டின் தலைநகரான வஞ்சி, பேரியாற்றின் கரையில் உள்ள முசிறி துறைமுக பட்டினத்திற்கு அருகிலேயே அமைந்து இருந்தது.
- முசிறி துறைமுகத்தில் மிளகு ஏற்றுமதி சிறப்புடன் நடைபெற்றது.
- யவணர் விரும்பி வாங்கியதால் மிளகிற்கு யவனப்பிரியா என்ற பெயர் ஏற்பட்டது.
- யவணக் கப்பல்கள் பொன்னைத் தந்து மிளகை வாங்குவதற்காக முசிறி வந்தன. இதனை,

**"சுள்ளிஅம் பேரியாற்று வெண்நுரை கலங்க**

**யவனர் தந்த வினைமாண் நன்கலம்**

**பொன்னொடு வந்து கறியொடு பெயரும்**

**வளங் கெழு முசிறி"**

**- என்று அகநானூறு கூறுகிறது.**

**பொருள்**

- சுள்ளி என்னும் பெயர் கொண்ட பேரியாறு சேர அரசர்க்கு உரித்தானது. அவ்வழகிய ஆற்றினது. வெண்ணிற நுரை சிதறுமாறு தொழில் மாட்சியமைக்கப்பட்ட, யவனர்கள் கொண்டு வந்த நல்ல மரக்கலம் பொன்னைக் கொண்டு வந்து விலையாகக் கொடுத்துவிட்டு மிளகை ஏற்றி செல்லும் வளமுடியது முசிறி என்னும் பட்டினம்.
- அரேபியர் சேரநாட்டு மிளகை செங்கடல் துறைமுகங்களிலும், எகிப்தின் நைல் நதி கடலில் கலக்கும் இடத்தில் உள்ள அலெக்சாண்டரியா துறைமுக பட்டினத்திலும் விற்றனர்.
- முசிறி துறைமுகத்தில் அரேபியர் வணிகம் செய்த இடம் பந்தர் கடைவீதி எனப்பட்டது. அந்த பந்தரில் முத்துக்களும், விலையுயர்ந்த நகைகளும் விற்கப்பட்டன.
- முசிறியில் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் பவளம், கண்ணாடி, செம்பு, தகரம், ஈயம் முதலியவை யவனர்களால் இறக்குமதி செய்யப்பட்டன.

⇒ **<u>முசிறி– அலெக்சாண்டிரிய ஒப்பந்தம்:</u>**

- முசிறியில் வாழ்ந்த தமிழ் வணிகனுக்கும், அலெக்ஸாண்டரியா வணிகனுக்கும் பொ.ஆ.பி 150 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இந்த வணிக ஒப்பந்தபடி தமிழ் வணிகன் ஒருவன் கப்பலில் கொண்டு சென்ற வணிகப் பொருட்களின் பண மதிப்பீடு 2, 94, 84,000 கிராம் வெள்ளியின் எடைக்கு ஈடானது. அன்று எகிப்து நாடு உரோம பேரரசின் கீழ் இருந்தது.

- ராமநாதபுரம் அழகன் குளத்தில் நடந்த அழகாய் அகழாய்வில் கிடைத்த 2000–ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பானை ஓடுகளில், காணப்படுகின்ற கீறல் கோட்டோவியம் வணிகக் கப்பலை குறிக்கிறது. சங்க கால தமிழர்களின் துறைமுகமாக கருதப்படும் அழகன் குளத்தில் இருந்து ரோம் நகரத்திற்கு கடல் பயணம் மேற்கொண்ட கப்பலின் மாதிரியாக இது குறிப்பிடபடுகிறது.

➢ **"நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர்"**
 – பாடல் 55, அடி : 4

➢ **"பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர்"**
 – பாடல் 67 அடி : 2

➢ **"பந்தர் பயந்த வளர்ப்புகள் முத்தம்"**
 - பாடல் 74 அடி: 6

**– பதிற்றுப்பத்து**

⇒ **<u>துறைமுக நகரங்கள் தூங்கா நகரங்களாக திகழ்ந்ததன் காரணங்கள்:</u>**

- யவனக் குதிரைகள் ஓடுகின்ற ஓசை.
- உரோமேனியர்கள் பொருள்களை பொற்காசுகள் கொடுத்து வாங்கும் ஒலி.
- விளக்கொளி
- உள்நாட்டினரும் வெளிநாட்டினரும் இரவில் நடமாடிய சப்தங்கள்.

⇒ **<u>கொற்கை :</u>**

- இது பாண்டிய மன்னர்களுக்குரிய துறைமுகம்.
- இங்கு முத்துக்குளித்தல் மிகச் சிறப்பாக நடந்ததை வெனிசுலா நாட்டு நாட்டறிஞர் 'மார்கோபோலோ' குறிப்பிட்டுள்ளார்.
- 'விளைந்து முதிர்ந்த விழுமுத்து'– மதுரைக்காஞ்சி
- சிறுபாணாற்றுப்படையும் கொற்கை முத்தினை சிறப்பித்து கூறியுள்ளது.
- தாமிரபரணி ஆறு கடலில் கலக்கும் இடத்தில் ஆற்றின் மேற்கு கரையில் அமைந்த இயற்கை துறைமுகம் கொற்கை.
- பாண்டிய நாட்டின் இளவரசர்கள் இங்கு தங்கி நிர்வாக முறையைக் கற்றனர். பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர் துறந்த பின் பொற்கையில் இருந்த பட்டத்து இளவரசன் வெற்றிவேற் செழியன் மதுரை வந்து அரியணை ஏறிய செய்தியை சிலப்பதிகாரத்தின் நீர்ப்படை காதையில் உள்ள அடிகள் குறிப்பிடுகின்றன.

➢ **"கொற்கையில் இருந்து வெற்றி வேற் செழியன்" – (அடி– 127)**

➢ **மன்பதைக் காக்கும் முறை முதல் கட்டிலின் – (அடி –134)**

➢ **மாலைத் திங்கள் வழியோன் ஏறினான் – (அடி – 138)**

- பாண்டியர்களின் கப்பற்படை தளமாகவும் விளங்கிய கொற்கையில், குடாக்கடல் ஐந்து கல் தொலைவிற்கு நிலத்தில் உள்ளே ஊடுருவி இருந்தது. முத்துச்சிப்பிகளும், சங்குகளும் இங்கு உண்டாயின.

**"இவர்திரை தந்த ஈங்கதிர் முத்தம்**

**கவர்நடைப் புரவிக் கால் வடுத் தபுக்கும்**

**நற்றேர் வழுதி கொற்கை முன் துறை**

**– வெண்கண்ணனார்**

- என்று அகநானூற்றின் (பாடல் எண்.130) வரிகள் செல்வர் ஏறிவரும் குதிரையின் குளம்புகளுக்குள் மாட்டிக்கொள்ளும் அளவிற்கு கரையோரங்களில் பொருள்கள் குவிந்திருந்ததைக் குறிப்பிடுகின்றன.
- 'வலம்புரி மூழ்கிய வான்திமிழ் வரதவர்' என அகநானூற்றின் வரிகள் (பாடல் எண்.350) முத்து குளிப்பது மட்டுமின்றி வலம்புரிச் சங்கு எடுக்கவும், அங்குள்ள ஆடவர் கடலில் மூழ்குவர் என்ற செய்தியை கூறுகிறது.
- தற்காலத்தில் கொற்கை பகுதியில் நடந்த அகழாய்வின்போது கிடைத்த பெருங்கற்காலத்தை சேர்ந்த முதுமக்கள் தாழிகள் இப்பகுதியின் தொன்மைக்கு சான்றாகும்.
- கொற்கையை ஆண்ட பாண்டிய மன்னர்கள் உரோம் நாட்டின் அகஸ்டஸ் மன்னனின் அரசவைக்கு முத்துக்களை பரிசாக அளித்தார்கள் என வரலாற்று அறிஞர், ஸ்டார் ரோபோ குறிப்பிடுகிறார்.
- பாண்டிய மன்னர்களின் குதிரை படைகளுக்காக ஆண்டுதோறும் கொற்கையில் ஆயிரக்கணக்கான பாய்மரக் கப்பல்களில் 16,000 அரேபிய குதிரைகள் வந்து இறங்கின.
- கொற்கைப் பட்டினத்தில் பாண்டிய நாட்டு நாணயங்களை அச்சிடுவதற்கான பட்டறைகள் நிறைந்த தெரு அஃகசாலை எனப்பட்டது. பாண்டியர்களின் மீன் முத்திரை பதித்த வெள்ளி நாணயங்கள் இங்கு கிடைத்துள்ளன.

⇒ **<u>காவிரி பூம்பட்டினம்</u>**

- இது சோழ மன்னர்களுக்கு உரிய துறைமுகம்.
- கடற்கரையை அடுத்து இருக்கும் ஊர்கள் பட்டினம் பாக்கம் எனப்பட்டன.
- பூம்புகாரில் கடற்கரையை அடுத்து பட்டினப்பாக்கம் என்ற ஊர் இருந்தது.
- சுங்கச் சாலையும் கலங்கரை விளக்கமும் இருந்தன.
- அங்கு கப்பலில் ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் அளவில்லாத பண்டங்கள் முன்றில் மழை போல கிடக்கும்.
- அங்குள்ள தெருக்களில் கடல்விழி வந்த குதிரைகளும், நிலத்தின் வலி வந்த மிளகுப் பொதிகளும், இமயத்தில் உண்டான மணிகளும் பொன்னும், குடகுமலையில் பிறந்த சந்தனமும் அகிலும், கொற்கையில் பிறந்த முத்தும் கீழ்கடலில் உண்டான பவளமும் கங்கையில் உண்டான பொருள்களும் காவிரியில் உண்டான வளங்களும் ஈழநாட்டின் உணவுப்பொருளும் பரந்து கிடந்தன.
- காவிரி பூம்பட்டினத்து மாடங்களில் உள்ள மகளிர் வெறியாடும் மகளிரோடு பொருந்தி வேய்ங்குழல் முதலியவற்றை வாசிக்க நகர்விலாக் கோலம் பூண்டிருக்கும். தெய்வத்துக்கென எடுத்த கொடிகளும், விலை பண்டங்களை அறிவித்ததற்கு கட்டிய கொடிகளும், ஆசிரியர்கள் வாது செய்யக் கருதி வைத்த கொடிகளும், கப்பலின் கூம்பில் உள்ள கொடிகள் அங்கு கலந்து காணப்பட்டன.
- சோழவள நாட்டின் காவிரி ஆறு கடலில் கலக்கின்ற இடத்தில் வடகரையின் மேல்

காவிரி பூம்பட்டினம் என்னும் இயற்கை துறைமுகம் அமைந்திருந்தது.

- இது மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என இரண்டு கூறுகளாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. இரண்டு பிரிவுகளுக்கும் இடையில் நாளாங்காடு இருந்தது. கடற்கரை ஓரமாக காவிரி ஆற்றின் கரைமேல் கலங்கரை விளக்கம் அமைந்திருந்த்து.
- காவிரி ஆற்றின் முகத்துவாரம் ஆழமாகவும் அகலமாகவும் பல கப்பல்கள் தங்குவதற்கு ஏற்றதாகவும் கப்பல்கள் பாய்களைச் சுருட்டாமலும் பாரதத்தைக் குறைக்காமலும் நேரே ஆற்றினுள் புகுந்து துறைமுகத்தை அடைவதற்கு ஏற்றதாகவும் இருந்தது.
- துறைமுகங்களுக்கு அருகில் ஏற்றுமதி, இறக்குமதி பொருள்களைப் பாதுகாப்பாக வைக்க அகன்ற கிடங்குகள் இருந்ததாகவும், சுங்க தீர்வைகள் வைத்திருக்கப்பட்டதாகவும் பட்டினப்பாலை கூறுகிறது.
- புகார் நகரத்தில் சுங்க தீர்வையைப் பெற்றுக் கொண்டு சோழப் பேரரசின் இலச்சினையான புலிச் சின்னத்தை அடையாளம் இட்டு வெளியே அனுப்புவதற்காகக் குவித்து வைக்கப்பட்டிருக்கும் பண்டங்கள் மலைபோல் தோற்றம் தரும் என்று பட்டினப்பாலை கூறுகிறது.
- வணிகம் நடந்த காலகட்டம் பொ.பி.முதல் இரண்டு நூற்றாண்டுகள். இங்கு வந்த வணிகர்கள் உரோமபுரியில் இருந்து வந்த யவனர்கள் கிழக்கிலிருந்து வந்த சாவக நாட்டினர், வட இந்திய வணிகர்.

⇒ **<u>சோழநாட்டு வணிகர் சென்ற இடங்கள்</u>**

- சாவகநாடு, காழகம், கங்கை துறைமுகம்

⇒ **<u>இங்கு வாழ்ந்த மக்கள்</u>**

- இங்கு பெரும்பாலும் சோழ இளவரசர்களும் வாழ்ந்திருந்தனர்.
- சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை காப்பியம் மாந்தர்களான கோவலன், கண்ணகி, மாதவி, மணிமேகலை ஆகியோர் இளவரசன் கிள்ளிவளவன் ஆட்சி காலத்தில் இங்கு வாழ்ந்திருந்தனர்.

⇒ **<u>குறிப்பு</u>**

- பொ. ஆ.பி. முதல் நூற்றாண்டில் ஹிப்பல்ஸ் என்ற கிரேக்க மாலுமி, பருவக்காற்றின் உதவியால் முசிறித் துறைமுகத்துக்கு நேரே நடுக்கடல் வழியாக விரைவில் பயணம் செய்யும் புதிய வழியைக் கண்டுபிடித்தார். அதனால் அந்த பருவக்காற்றுக்கு யவனர்கள் ஹிப்பல்ஸ் என்ற பெயரை சூட்டினர். ஹிப்பல்ஸ் பருவக்காற்று வழியில் யவனக் கடல் வணிகம் பெருகிற்று.
- பொ.ஆ.பி.முதல் நூற்றாண்டில் உரோமப் பேரரசை ஆண்ட அகஸ்தஸ் சீஸர், யவனர்–தமிழர் வணிகத்தை விரிவு படுத்தினார்.
- உரோமபுரி அரசர்களின் உருவமுத்திரை இடப்பட்ட பழைய நாணயப் புதையல்கள் தமிழ்நாட்டில் அகழாய்வின்போது கண்டெடுக்கப்பட்டுள்ளன.

⇒ **<u>துறைமுக நகரங்களின் சிறப்புகளை உணர்த்தும் சான்றுகள்:</u>**

- மார்க்கோபோலோ தன் பயணக் குறிப்பில் இந்த நகர அமைப்புகள், மாடமாளிகைகள் ஆகியன தம்மைக் கவர்ந்ததாக குறிப்பிடுகிறார்.
- முதல் நூற்றாண்டை சேர்ந்த இத்தாலி நாட்டின் பிளினி தம் குறிப்பில் எகிப்து


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

நாட்டைச் சேர்ந்த அரசி கிளியோபாட்ரா கொற்கை முத்தை அணிந்ததாக பதிவு செய்துள்ளார்.

- கொற்கை முத்தின் சிறப்பினை அர்த்த சாஸ்திரமும் குறிப்பிடுகிறது.

⇒ **தமிழரின் கப்பற்க் கலை**

- நமக்கு கிடைத்துள்ள நூல்களிலேயே மிகவும் பழமையானது தொல்காப்பியம். அந்நூல் ‘முந்நீர் வழக்கம்’ என்று கடற்பயணத்தை குறிப்பிடுகிறது.

⇒ **கடற்பயணத்திற்க்கான சான்றுகள்:**

**கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்**
**நாவாயும் ஓடா நிலத்து**

- (**திருக்குறள் 496**)

- இக்குறள் மூலம் திருவள்ளுவர் காலத்திலேயே பெரிய கப்பல்கள் இருந்ததை அறிய முடிகிறது. பட்டின பாலையில் பூம்புகார் துறைமுகத்திலிருந்து பெரிய கப்பல்கள் மூலமாக ஏற்றுமதி, இறக்குமதி நடந்ததை அறிய முடிகிறது.
- **‘உலக கிளர்ந்தன்ன உருகெழுவங்கம்’** இன் அகநானூறு குறிப்பிடுகிறது.
- ‘அடுங்கலம் தரீஇயர் நீர்மிசை நிவக்கும் பெருங்கலி வங்கம்’ என்ற பதிற்றுப்பத்து பாடல் 52 கூறுகிறது.
- ‘சேந்தன் திவாகரம்’ என்ற நிகண்டு நூலில் பல வகையான கப்பல்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.
- தொடக்க காலத்தில் தமிழர் மரங்கள் பலவற்றை இணைத்துக் கட்டி, அதன் மீது ஏறி நீரில் பயணம் செய்ததால் அவை கட்டுமரம் எனப்பட்டது. பின்னர் எடை குறைந்த பெரிய மரங்களின் முற்பகுதியை குடைந்து எடுத்துவிட்டு தோனியாக பயன்படுத்தினர். உட்பகுதி தோண்டப்பட்டதால் அவை தோணிகள் எனப்பட்டன.
- சிறிய நீர்நிலைகளைக் கடக்க தமிழர்கள் தோணி, ஓடம், படகு, புணை, மிதவை, தெப்பம் ஆகியவற்றை பயன்படுத்தினர்.
- கடல்வழி பயணத்திற்கு அளவில் பெரிய கலம், வங்கம், நாவாய் முதலியவற்றை பயன்படுத்தினர்.
- நியூசிலாந்து நாட்டு வெலிங்டன் அருங்காட்சியகத்தில் பழங்காலத் தமிழ்நாட்டு கப்பல்களில் பயன்படுத்தப்பட்ட மணி இடம்பெற்றுள்ளது. கடல் கடந்து தமிழர்கள் கப்பல்கள் மூலம் சென்றதற்கு இது ஒரு சான்று ஆகும். ராஜராஜ சோழனும், முதலாம் ராஜேந்திர சோழனும் பெரிய கப்பற்படையை கொண்டு பல நாடுகளை வென்றனர்.

⇒ **வாக்கர் என்னும் ஆங்கிலேயரின் கூற்று**

- ஆங்கிலேயர் கட்டிய கப்பல்களை 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பழுது பார்க்க வேண்டும். ஆனால் தமிழர் கட்டிய கப்பல்களை 50 ஆண்டுகள் ஆனாலும் பழுது பார்க்க வேண்டிய அவசியம் இல்லை.

⇒ **கப்பல் கட்டும் கலை**

- கப்பல் கட்டும் கலைஞர்கள் ‘கம்மியர்’ எனப்பட்டனர்.

**எடுத்துக்காட்டு :**

**‘கலஞ்செய் கம்மியர் வருகெனக் கூ இய்’**

**– மணிமேகலை**

- தண்ணீரால் பாதிப்படையாத மரங்களை தமிழர் கப்பல் கட்டுவதற்கு பயன்படுத்தினர். நீர்மட்ட வைப்பிற்கு வேம்பு, இலுப்பை, புண்ணை, நாவல் மரங்களை பயன்படுத்தினர். பக்கங்களுக்கு தேக்கு, வெண் தேக்கு மரங்களை பயன்படுத்தினர்.
- மரத்தின் வெட்டப்பட்ட பகுதி 'வெட்டுவாய்' எனப்பட்டது.
- இழைத்த மரத்தில் காணப்படும் உருவங்கள் கண்ணடை எனப்பட்டது. சுழி உள்ள மரங்களை தமிழர் பயன்படுத்த மாட்டார்கள்.
- கப்பல் கட்டும் போது தச்சுமுழம் என்ற நீட்டலவையை பயன்படுத்தினர். பெரிய படகுகளின் முன்பக்கம் யானை, குதிரை, அன்னம் போன்றவற்றின் முகம் போன்று அமைக்கப்பட்டது. அவை கரிமுக அம்பி, பரிமுக அம்பி எனப்பட்டன.
- மரங்களையும், பலகைளையும் ஒன்றோடு ஒன்று இணைக்கும் போது இடையே தேங்காய் நார், பஞ்சு ஆகியவற்றில் ஒன்றை வைத்து நன்றாக இறுக்கி ஆணிகளை அறைந்தனர். இரும்பு ஆணிகள் துருப்பிடித்து விடும் என்பதால் மர ஆணிகளை பயன்படுத்தினர். இந்த ஆணிகள் **தொகுதி** எனப்பட்டன.
- சுண்ணாம்பையும், சணலையும் கலந்து, அரைத்து, அக்கலவையில் எண்ணெய் கலந்து, கப்பலின் அடிப்பகுதியில் பூசினர். இதனால் கப்பல்கள் பழுதடையாமல் நெடுங்காலம் உழைத்தன. இம்முறையை இட்டாலி நாட்டைச் சேர்ந்த கடற்பயணியான மார்க்கோபோலோ வியந்து பாராட்டி உள்ளார்.

⇒ **பாய்மரக் கப்பல்கள்:**

- இவை காற்றின் உதவியால் செலுத்தப்படுபவை ஆகும். இதன் வகைகளான பெரிய பாய்மரம், திருக்கைத்திகப் பாய்மரம், கோசுப் பாய்மரம்.

⇒ **பாய் மரங்களை கட்டும் கயிறு வகைகளான:**

- ஆஞ்சான் கயிறு, தாம்பாங்க்கயிறு, வேடாங்க்கயிறு, பளிங்கை கயிறு, முட்டங்கயிறு, இலங்கயிறு, கோடிப்பாய் கயிறு, கப்பலில் பாய் கயிறு ஆகியவற்றில் பழுது ஏற்படும்போது, மரப்பிசின் கொண்டு சரி செய்தனர் என பரிபாடலில் கூறுகிறது.

⇒ **கப்பலின் உறுப்புகள்**

**1. சுக்கான் :**

கப்பலை செலுத்துவதற்கும், உரிய திசையில் திருப்புவதற்கும் பயன்படும் முதன்மை கருவி.

**2. சமுக்கு :**

இது காந்த ஊசி பொருத்தப்பட்ட திசை காட்டும் கருவி என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இக்கருவி பற்றி 'கப்பல் சாஸ்திரம்' என்னும் நூல் குறிப்பிடப்படுகிறது.

⇒ **கப்பலை செலுத்தும் முறை :**

காற்றின் திசை அறிந்து கப்பல்களை செலுத்தும் முறையை தமிழர்கள் நன்கு அறிந்திருந்தனர். இதனை,

**"நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி**

**வளிதொழில் ஆண்ட உரவோன் மருக"**

- என்று புறப்பாடல் அடிகள் மூலமாக அறிய முடிகிறது. கப்பல் ஓட்டும் மாலுமிகள் சிறந்த வானியல் அறிவையும் பெற்றிருந்தனர்.
- வானில் தோன்றும் விண்மீன்களின் நிலையை வைத்து திசை அறிந்தனர். புயல், மழை போன்றவை தோன்றும்


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

காலங்களையும், கடல் பொங்கும் காலத்தையும் அறிந்து வைத்திருந்தனர்.

⇒ **<u>கலங்கரை விளக்கம் :</u>**

- கடலில் வரும் கப்பல்களுக்கு துறைமுகம் இருக்கும் இடத்தை காட்டுவதற்காக உயரமான கோபுரத்தின் உச்சியில் ஒளி வீசும் விளக்கினை கொண்டதாக இஃது அமைக்கப்படும்.
- கலம்–கப்பல்; கரைதல்–அழைத்தல்; ‘கப்பலை அழைக்கும் விளக்கு’ எனும் பொருளில் கலங்கரை விளக்கம் எனப் பெயரிடப்பட்டது.
- பெரிய கப்பல்கள் துறைமுகத்திற்கு அருகில் வர இயலாது எனவே கப்பலில் உள்ள பொருள்களை தோணிகள் மூலம் கரைக்கு எடுத்து வந்தனர் என்பதை,

  **“கலம் தந்த பொற்பரிசம்**

  **கழித் தோணியால் கரை சேர்க்குந்து”**

  என்ற புறநானூற்று (பாடல் - 343) மூலம் அறிய முடிகிறது.

கடல் ஆமைகள் இனப்பெருக்கத்திற்காக தகுந்த இடம் தேடி, நீண்ட தூரம் பயணம் செய்கின்றன. அவை செல்லும் வழியை செயற்கைக்கோள் மூலம் ஆராய்ந்த பொழுது அவ்வழியில் உள்ள நாடுகளுடன் தமிழர்கள் வணிக தொடர்பு கொண்டிருந்தது அறிய முடிந்தது. எனவே பழந்தமிழர்கள் கடல் ஆமைகளை வழிகாட்டிகளாக பயன்படுத்தி இருக்கலாம் என்ற கருத்து நிலவுகிறது.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in